ராஜாஜி

வாழ்க்கைச் சித்திரம்

சந்தவ கார்ட்டூன்கள்

3307
3307

தமிழ்ப் பண்ணை
தி.நகர் — சென்னை

ராஜாஜி

வாழ்க்கைச் சித்திரம்

3.12.86 (4/7)
17.12.86 (5/7)
22.5.86

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

சந்தனு கார்ட்டூன்கள்

பாகனேரி

தமிழ்ப் பண்ணை
தியாகராயநகர் — சென்னை.

முதற் பதிப்பு: செப்டம்பர் 1948

விலை: 0—12—0

சகல உரிமைகளும்
தமிழ்ப் பண்ணையைச் சேர்ந்தது

ஜீவோதயம் அச்சகம், சென்னை-5.

முதல் முயற்சி

'கார்ட்டூன்' போட்டுத் தமிழ் நாட்டில் ஒரு புரட்சியை உண்டாக்கிய மகா மேதாவி, ஆனந்தவிகடன் பத்திரிகையில் சேவை செய்த மாலி என்பது உலகப்பிரசித்தம்.

ஆயிரக்கணக்கான மக்களின் உள்ளத்திலே ஒரு விஷயத்தை வெகு சுலபமாக புகட்டிவிடக் கூடிய அற்புதமான கலை 'கார்ட்டூ'னாகும்.

'கார்ட்டூன்' என்பதற்கு தமிழில் 'கேலிச்சித்திரம்' என்று சொல்லுகிறார்கள். கேலிச் சித்திரம் என்ற வார்த்தையில் 'கார்ட்டூன்' என்பதற்குரியபூரண அர்த்தமும்தொனிக்கவில்லை என்பது நம் கருத்து. 'கார்ட்டூன்' கலையே தமிழ் நாட்டுக்குப் புதியது. புதிதாக வந்த ஒரு கலைக்கு பொருத்தமில்லாத அர்த்தத்தை மொழிபெயர்த்துக் கொடுப்பதைவிட 'கார்ட்டூன்' என்ற சொல்லையே உபயோகித்துவிடுவது நலம். இந்தக் கலையை தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் ரசிக்கும்படி செய்த மாலிக்கு இந்தப் புத்தகத்தை சமர்ப்பணம்

செய்கிறோம். மாலியின் கார்ட்டூன்களை வெளியிட்டு தமிழகத்திற்குப் பெருமையைத் தேடிக்கொடுத்த உபகாரிகளான 'கல்கி' அவர்களுக்கும், ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். மாலியின் 'கார்ட்டூன்' களினால் எழுச்சியுற்ற அநேகம் சித்திரக்காரர்களில் ஸ்ரீசந்தனுவும் ஒருவர். இன்றைய கார்ட்டூனிஸ்டுகளில் தலைசிறந்து விளங்கும் ஸ்ரீசந்தனு அவர்கள், நமது தலைசிறந்த தலைவர் ராஜாஜி அவர்களின் வாழ்க்கையை சித்திரமாக அமைத்துக் கொடுத்திருக்கிறார். தமிழ்நாட்டிற்கே இது ஒரு புதிய முயற்சி. இந்த முயற்சியை தமிழ் மக்கள் பாராட்டி ஆதரித்தால் மகாகவி சுப்ரமண்ய பாரதியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை போன்ற பெரியார்களது வாழ்க்கையையும் இம்முறையிலே போடுவதற்கு உற்சாகமாக இருக்கும்.

தமிழ் மக்கள் தங்களுடைய பரிபூரண அன்பை எங்களுக்குத் தந்து உதவுவார்களென நம்புகிறோம்.

'பண்ணை'


1
பாரதபூமி என்று புகழப்படும்
இந்தியாவில் தமிழ் நாடு பல அம்சங்களிலும்
சிறப்புற்று விளங்கி வருகிறது
திருவள்ளுவர் போன்ற மகா முனிவர்களும்,
கம்பர் போன்ற கவிமணிகளும், பாரதியார் வ.உ.சித
ம்பரம்பிள்ளை போன்ற தேசபக்தர்களும் தோன்றிய
தமிழ்நாட்டில் ராஜாஜியும் தோன்றினர்
தமிழ் நாடு
சேலம்
பிறந்தஇடம் சேலம் ஜில்-
லாவில் ஒசூர் என்ற கிராமம்
ஆண்டு: பகுதான்ய வருஷம்
கார்த்திகை மாதம் ௨௫ந்தேதி.


2
ராஜாஜி, சிறுவயதில் வீட்டிலேயே, தன் தகப்பனாரால் கல்வி போதிக்கப்பட்டார்
3
சிறுவயதில் அவருக்கு, மாடு, குதிரை, பூனை முதலிய பிராணிகளிடம் மிகுந்த அன்பு உண்டு


4
ராஜாஜி, பெங்களூர் சென்ட்ரல் ஹிந்து கலா-
சாலையில், சேர்ந்து உயர்தரப்படிப்பு படிக்கும்-
பொழுது, கலாசாலை புரொபசரால், புத்தி நுட்பத்து-
க்காக ரொம்பவும் போற்றப்பட்டார்.
3307
5
அவருக்கு பதினாறவது வயதில் திருமணம்
நடந்தது.


6
சுவாமி விவேகானந்தர் சென்னையில் இருந்த பொழுது ராஜாஜிக்கு அவரிடம் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.
7
சேலத்தில் அப்பொழுது வக்கீல் தொழிலில் மிகப்பிரபலமடைந்திருந்த ஸ்ரீ. ஸி. விஜயராகவாச்சாரியாருக்குச் சமமாக வக்கீல் தொழிலில் பிரக்யாதி அடைந்தார்.
சாமர்த்தியம்

8
1906ம் ஆண்டில் சேலம் கலாசாலையில், ஜாதி இந்துக்களின் எதிர்ப்புக்களிடையில் மிகச்-சிரமப்பட்டு ஹரிஜனச்சிறுவன்களை சேர்ப்பித்தார்.

9
ராஜாஜி சேலம் நகரசபைத்தலைவராயிருக்கும்-பொழுது. இவரின் தீண்டாமை ஒழிப்பு வேலையை எதிர்த்து, இவர்மேல் கண்டனத்தீர்மானம். நகரசபை அங்கத்தினர்களால் கொண்டுவரப்பட்டது. ராஜாஜி. அஞ்சாமல் அதை நிராகரித்தார்.
கண்டனத்தீர்மானம்

10
சிதம்பரம் நந்தனார் கழகத்தை நடத்திவரு
கிற சுவாமி சகஜானந்தத்திற்கு ஸ்ரீஸி. அன
ந்தாச்சார்யார் வீட்டில் விருந்து நடத்தினார். அதில்
சேலத்தில் பிரபல உயர் வகுப்பினர் பலர் கலந்து
கொண்டனர்.


11
அடிக்கடி ராஜாஜி தம் வைதிகத்தகப்-
பனாரை கோச்சு வண்டியில் உட்காரவை
வைத்து தானே சாரத்தியம் செய்துகொண்டு
செல்வார்


12
ஒருசமயம், மகாகனம் ஸ்ரீனிவாஸ சாஸ்திரி-
யாரால் சேலத்தில் மிதவாதக்கட்சியை ஆத-
ரித்து நடத்தப்பட்ட கூட்டத்தில், ராஜாஜி, அக்கட்சி-
யின் கொள்கையையே கண்டித்துப்பேசி தீர்மானம்
நிறைவேற்றினர்


13
1919ல், சென்னையில் முதன்முதலாக காந்தி
ஜியைச் சந்தித்தபொழுது இருவருக்கும் நெரு-
ங்கிய நட்பு ஏற்பட்டது. ராஜாஜி, தன் செல்வம், சுகம்
முதலியவைகளை உதறித்தள்ளிவிட்டு, காங்கிரசில்
சேர உறுதிபூண்டார்


14
காங்கிரசின் ஒத்துழையாமை இயக்கம் நடக்கும்பொழுது கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த தன் இரு புத்திரர்களையும் படிப்பை நிறுத்தி வீட்டிற்கு அழைத்துவந்தார்


15
1921ம் ஆண்டில், சர்க்கார் தடையுத்த-ரவை மீறியதற்காக மூன்றுமாத தண்டனை விதிக்கப்பட்டார்


16 காங்கிரசின் நிர்மாணத்திட்டம் நல்ல முறையில் நடப்பதற்காக, பிளவுபட்டிருந்த "சட்டசபை வேண்டும், வேண்டாம்", இருகட்சியினருக்கும் சமரசத்தை ஏற்படுத்திவைத்தார்.
17 மகாத்மா காந்தியின் கொள்கைகளையும் செய்கைகளையும், அப்படியே கடைப்பிடிப்பவராதலால் "தென்னாட்டு காந்தி" என்றும் பெயர் வாங்கினார்

18
1924ம் ஆண்டில் திருச்செங்கோட்டில், காந்தி ஆசிரமத்தை நிறுவினார். அதன் வாயிலாக கதர், மதுவிலக்கு, தீண்டாமையொழிப்பு முதலிய நிர்மாணத்திட்டங்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தினார்.
காந்தி ஆசிரமம்
19
அச்சமயம், மதுவிலக்குப் பிரசாரத்தை வெற்றிகரமாக நடத்தவேண்டி “விமோசனம்” என்ற தமிழ் மாதப்பத்திரிக்கையை நடத்தி வந்தார்
ஆசிரியர்


20
1930ம ஆண்டில், ராஜாஜி, தமிழ் மாகாண
காங்கிரஸ்கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடு-
க்கப்பட்டார்
தலைமை
ப்பதவி
21
அதேவருஷத்தில், வடக்கே, மகாத்மாவின்
தண்டி உப்புசத்யாக்ரகத்திற்குச் சமமாக,
மிகப்பிரசித்திபெற்ற வேதாரண்யம் சட்டமறுப்பை
வெற்றியுடன் நடத்தினர்

22 அதன் பயனாக மறுபடியும் 3 மாத சிறை
தண்டனை பெற்றார். பொதுமக்கள் அதை
எதிர்த்து தமிழ் நாட்டின் பலபாகங்களிலும்
கூட்டங்கள் நடத்தி கிளர்ச்சி செய்தனர்

23 ராஜாஜி, தமிழ் மொழியில் மிகுப்பற்று
டையவர். "உபநிஷதப்பலகணி" கண்ணன்
காட்டிய வழி "வியாசர் விருந்து" முதலிய பல
அருமைத் தமிழ் நூல்கள் எழுதியிருக்கிறார்.




24
1933ம் ஆண்டு ஜுலைமாதம் 16ந்தேதி யன்று ராஜாஜி தனது குமாரத்தி லக்ஷ்மி-யை காந்திஜியின் குமாரரான தேவதாஸ் காந்-திக்கு திருமணம் செய்வித்தார்
25
1937ம் ஆண்டில் சென்னை மாகாணத்தின் முதல் பிரதம மந்திரியானார். அவரின் திறமையான ஆட்சியினால் சகல அம்சங்களிலும், சென்னை இந்தியாவிலேயே முதன்மையாக நின்றது
சென்னை
மற்ற
மாகா
ணங்
கள்


26
அவர் பிரதமராயிருந்தசமயம், சேலம் ஜில்லாவிலிருந்து மதுஅரக்கனை ஒழித்தார். மதுரையில் ஆலயப்பிரவேசம்செய்ததன் மூலம் தீண்டாமைப்பேயையும் விரட்டினர்
மது அரக்கன்
தீண்டாமைப் பேய்

27
அடுத்தபடியாக ஹிந்தியை சென்னை மாகாணத்தில் கட்டாயபாடமாகவைத்தார். ஒருசிலர் எதிர்ப்பு இருந்தும் அஞ்சவில்லை.


28
1938ம் ஆண்டில், சுபாஷ்போஸின் தலைமைப் பதவியை எதிர்த்து திரிபுரா காங்கிரசில், பேசுகையில், 'சுபாஷ் போஸ் ஓட்டப்படகில் செல்லுகிறார்" என்று எச்சரித்தார். சுபாஷ் போஸும் ராஜிநாமாச் செய்ய நேர்ந்தது


29
1939ல், 2வது உலகயுத்தம் ஆரம்பிக்கவே, காங்கிரஸ் சர்க்கார் ராஜிநாமாச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ராஜாஜியும் ராஜிநாமாச் செய்து மந்திரிசபையைக் கலைத்தார்.
ராஜிநாமா

30
இச்சமயத்தில் புனா காங்கிரசில் 'பிரிட்-
டிஷார் இணங்கிவந்தால் யுத்தமுயற்சியில்
காங்கிரஸ் ஒத்துழைக்கும்' என்ற தீர்மானத்தைக்-
கொண்டுவந்து காரியக்கமிட்டியை ஏற்கும்படிச்-
செய்தார். அதன்பயனாக காந்திஜியின் அஹிம்சைக்
கொள்கையிலிருந்து காங்கிரஸ் சிறிது விலகி
நின்றது
புனா காங்கிரஸ் தீர்மானம்

31
ஆனால், பிரிட்டிஷார் இணங்கி வராததால்
"யுத்தமுயற்சியில் ஈடுபடவேண்டாமென்று
பெரிய மனிதர்களுக்கெல்லாம் கடிதங்கள் எழுதி-
னார். அதன் பொருட்டு கைது செய்யப்பட்டார்.


32
மாஜிஸ்டிரேட் அப்பாஸ் அலி தன் கண்களில் நீர்ததும்ப ராஜாஜிக்கு ஒருவருஷ வெறுந்தண்டனை விதித்தார்


33
தண்டனை முடிந்து வெளிவந்த சமயம் பிரிட்டிஷார் 'கிரிப்ஸை' ஒரு திட்டத்துடன் அனுப்பி வைத்தனர். ராஜாஜி அதை ஏற்கலாமென்றார். ஆனால், மற்ற தலைவர்கள் சம்மதிக்கவில்லை.
கிரிப்ஸ் திட்டம்

34 தன் உபதேசத்தை ஏற்காததைக்கண்டு. ராஜாஜி காங்கிரசிற்கே வழிகாட்டும் வேலையில் இறங்கினார். காங்கிரஸ்-லீக் சமரஸமில்லாமல் சுயராஜ்யம் கிடைக்காதென்று பிரசாரம் செய்யத் தொடங்கினார்.

35 பின்னர் டில்லியில் கூடிய காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்தில் பாகிஸ்தான் கோரிக்கைக்கு ஆதரவு காட்டித் தீர்மானத்தைக் கொண்டு வந்தார் ராஜாஜி. ஆனால், அது நிராகரிக்கப்பட்டது.




36
1942 ஆகஸ்டில் தலைவர்கள் கைது செய்-
யப்பட்டதால் பெரிய புரட்சி ஏற்பட்டது.
ராஜாஜி அதை ஆதரிக்கவில்லை

37
1945ல் மறுபடியும் ராஜாஜி காங்கிரசில்
சேருவதை தமிழ் நாட்டில் சில கோஷ்டி-
யினர் பதவிமோகம் காரணமாக எதிர்த்தனர்

38 இதற்கிடையில் மகாத்மா தமிழ்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்ய வந்தார். ராஜாஜியும் கூடவே சுற்றுப்பிரயாணத்தில் கலந்து கொண்டார்

39 பிரிட்டனில் ஆட்லி சர்க்கார் ஆட்சிக்கு வந்ததும் அரசியல் சீர்திருத்தம் கொடுத்தனர். அதன்படி ராஜாஜியைச் சட்டசபைக்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கும்படி மேலிடத்தார் சிபார்சு செய்தனர். ஆனால் மாகாண கமிட்டியினர் அதை நிராகரித்தனர்

40
பின்னர் கிரிப்ஸ் திட்டத்தை விட மிக மோச-
மான பிரிட்டிஷ் மும்மந்திரிகள் திட்டத்தை
காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. அதன்படி ஏற்பட்ட
இடைக்கால மந்திரி சபையில் ராஜாஜியும் ஒரு
மந்திரியாக நியமிக்கப்பட்டார்

41
முஸ்லிம்கள் மெஜாரிடியாக உள்ள ஜில்லா-
க்களுக்கு சுயநிர்ணய உரிமை கொடுக்க-
லாம் என்ற ராஜாஜியின் திட்டத்தை எதிர்த்த
காங்கிரஸ், பின்னால் அதைவிட அதிகமாக. இந்-
தியாவில் ஒரு பகுதி பாகிஸ்தானே கொடுக்கும்-
படியாய் நேர்ந்தது

42 1947, ஆகஸ்டு 15ல், இந்தியாவுக்கு சுய-ராஜ்யம் கிடைத்ததும் மேற்குவங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார். வகுப்புக்கலகத்தால் பாதிக்கப்பட்டிருந்த வங்காளத்தை சாந்தம் நிலவும்படிச் செய்தார்.

43 1948ம் ஆண்டு ஜூன் 21ல் தமிழ்நாட்டிற்கே பெருமை ஏற்படும் வகையில் மௌண்ட்பேட்டன் காலிசெய்துவிட்டுப்போன இடத்திற்கு கவர்னர்-ஜெனரலாக நியமிக்கப்பட்டார்




44
பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல்கள் நம்மை ஆட்சி செய்த காலத்தில், பொழுது விடிந்தும் வெகு நேரம் கழித்துத்தான் அவர்கள் எழுந்திருப்பது வழக்கம்.
ஆனால், நம் புதிய கவர்னர் ஜெனரல் ராஜாஜியோ அதிகாலையில் எழுந்துவிடுகிறார்

45
பழைய பேர் வழிகள் சதா ஆடம்பர வாழ்க்கையிலேயே மூழ்கி இருந்தார்கள்
ஆனால் நம் ராஜாஜியோ அதே எளிய வாழ்க்கையைத்தான் அனுசரித்து வருகிறர்

46
பழைய பிரிட்டிஷ் ஆசாமிகள், ஆபீஸ் வேலைகளில் நேரிடையாகக் கவனம் செலுத்துவது கிடையாது
ஆனால் நம் சி.ஆர் ஒவ்வொரு வேலையையும் தானே நேரில் கவனித்துச் செய்கிறார்


47
பிரிட்டிஷ் பேர்வழிகள் காலத்தில், அவர்கள் அறையில் பிரிட்டிஷ் மன்னர் மாஜி வைசிராய்கள் படங்கள் அலங்கரித்து நிற்கும்
ஆனால், இன்று ராஜாஜியின் அறையை, காந்தி மகான், ராமகிருஷ்ண பரமஹம்சர் படங்கள்தான் அலங்கரிக்கின்றன


48
அரசியலில் நல்ல ஞானமுள்ளவர்கள்கூட ராஜாஜியை அறிய வெகுநாட்கள் பிடிக்கும்
காந்திஜியின்மூளையும் தத்துவ ஞானமும் ராஜாஜி என்று சொல்வதுண்டு
ராஜாஜி முதல்தர ராஜதந்திரி. இந்திய சரித்திரத்தில் சாணக்-ய னைத்தவிர வேறு யாருடனும் ராஜாஜியை ஒப்பிட முடியாது.
காங்கிரஸ் என்ற கப்பல் சிலசமயங்களில் "அரசியல் ராஜதந்திரம்" என்ற புயலில் சிக்கித் திசை தவறிப் போகையில் 'விவேகம்' என்ற பாறைமீது நிற்கும் இந்தக் கலங்கரை விளக்கமே திசைகாட்டியாயிருந்து, கப்பலை ஆபத்தில்லாமல் கரைசேர்த்து-வருகிறது.
சந்தரி

கவர்னர் ஜெனரல் ராஜாஜியின்

நூல்கள்

3307

- ○ வியாசர் விருந்து
- ○ ஆத்ம சிந்தனை
- ○ ஸோக்ரதர்
- ○ கட்டுரைகள்
- ○ கதைகள்
- ○ அறநூல்கள்
- ○ திண்ணை ரசாயனம்
- ○ போட்டி ஒழிக
- ○ தாவரங்களின் இல்லறம்
- ○ சிசுபாலனம்
- ○ THE WAY OUT

தமிழ்ப் பண்ணை

தியாகராயநகர் .: சென்னை

3307

ஏட்டிக்குப் போட்டி

★ கல்கியின் கதைகளும் கட்டுரைகளும்

விலை ரூ.... 4-8-0

★

தமிழ்ப்பண்ணை

தியாகராய நகர் சென்னை.